பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 04 2025 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஃபின்லாந்து அதிபர் திரு. **Alexander Stubb**-புடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சு நடத்தினார்.

2. சர்வதேச அளவில் பெருகிவரும் மனிதவள தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், திறன் பயிற்சிகளை வழங்கும் அமைப்பு ஒன்றை நிறுவவேண்டியது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் மீன் உற்பத்தி ஒரு கோடியே 84 லட்சம் டன் அளவை எட்டியிருப்பதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் கூறியுள்ளார்.

4. இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி மஹாராஷ்ட்ரா மாநிலம், புனே-யில் இன்று தொடங்கியது.

5. உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Saurabh Chaudhary – Suruchi Inder Singh** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஃபின்லாந்து அதிபர் திரு. **Alexander Stubb**-புடன் இன்று தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார்.

தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை பலப்படுத்தும் வகையில் இந்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து தமது சமூகவலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள பிரதமர், ஃபின்லாந்து அதிபருடனான உரையாடல் பயனுள்ளதாக அமைந்தது என்றும், ஐரோப்பிய யூனியனில் இந்தியாவின் முக்கியமான நட்பு நாடாக ஃபின்லாந்து திகழ்கிறது என்றும் தெரிவித்தார்.

மேலும், யுக்ரைன் நிலவரம் உட்பட சர்வதேச மற்றும் மண்டல அளவிலான பிரச்சினைகள் குறித்து பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றத்தை மேற்கொண்டதாகவும் அந்தப் பதிவில் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<**

சர்வதேச அளவில் பெருகிவரும் மனிதவள தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், திறன் பயிற்சிகளை வழங்கும் அமைப்பு ஒன்றை நிறுவவேண்டியது அவசியம் என்று மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்தியா – மத்திய கிழக்கு, ஐரோப்பிய பொருளாதார மண்டல உச்சிமாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டில் இளையோருக்கு திறன் பயிற்சிகள் அதிக அளவில் கிடைக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதோடு, இந்தியாவின் மனிதவளமும் விரிவுபடுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பை மட்டுமல்லாமல் பாரம்பரியம் மற்றும் கலாச்சார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் இந்த மாநாடு நடத்தப்படுவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

**>>>>><<<<**

நேஷனல் ஹெரால்டு வழக்கு தொடர்பாக மோசமான அரசியல் உத்திகளை காங்கிரஸ் கட்சி கையாண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று உத்ராகண்ட் மாநிலம், ரிஷிகேஷில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வழக்கு ஊழல் சம்பந்தப்பட்டது என்றும், இது அரசியல் பிரச்சினை அல்ல என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையே, ரிஷிகேஷ் ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், **Janasu** சுரங்கத் திட்ட கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடத்தையும் பார்வையிட்டார்.

>>>>><<<<<

நாட்டில் மீன் உற்பத்தி ஒரு கோடியே 84 லட்சம் டன் அளவிற்கு உயர்ந்திருப்பதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று பிரதமரின் மீன்வளத் திட்டத்தின் கீழ், பல்வேறு நலத்திட்ட உதவிகளை அவர் இன்று வழங்கிப் பேசினார்.

புதிதாக 2 ஆயிரத்து 300 மீன்பிடி படகுகளில் டிரான்பான்டர்கள் பொருத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச எல்லையைக் கடக்கும் போது உரிய முன்னெச்சரிக்கையை பெறும் வகையிலும், மீன்களின் இருப்பு குறித்து தகவல் அறியும் வகையிலும் இந்த டிரான்ஸ்பான்டர்களின் பயன்பாடு இருக்கும் என்று அமைச்சர் கூறினார்.

மீனவர்களின் நலனுக்காக பல்வேறு நிதியுதவிகளை மத்திய அரசு செய்து வருவதாகவும், வேளாண் கடன் அட்டை திட்டத்தின் கீழ், 5 லட்சம் ரூபாய் வரை மீனவர்கள் தற்போது கடனுதவி பெற்று வருவதாகவும் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தின் முர்ஷிதாபாதில் நிகழ்ந்த வன்முறை குறித்து விசாரணை மேற்கொள்ள குழு ஒன்றை தேசிய மகளிர் ஆணையம் அமைத்துள்ளது.

மகளிர் ஆணையத் தலைவர் திருமதி. **Vijaya Rahatkar** தலைமையிலான நான்கு பேர் கொண்டு இக்குழுவானது பாதிப்புக்குள்ளானவர்களின் குடும்பத்தினர், மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகளை சந்திக்கவுள்ளது.

முர்ஷிதாபாதின் **Mandirpara** மற்றும் **Malda** மாவட்டப் பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த வன்முறையின் போது பாலியல் ரீதியில் பாதிப்புகளுக்கு உள்ளான பெண்கள் குறித்த ஊடகச் செய்திகளின் அடிப்படையில் தாமாக முன்வந்து மகளிர் ஆணையம் இந்த விசாரணைக் குழுவை அமைத்துள்ளது.

>>>>><<<<<

கடந்த நிதியாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 5 புள்ளி ஐந்து சதவீதம் வளர்ச்சியை கண்டிருப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த நிதியாண்டில் நாட்டின் ஏற்றுமதி 820 புள்ளி ஒன்பது மூன்று பில்லியன் டாலராக இருந்ததாகவும், அதற்கு முந்தைய நிதியாண்டில் அது 778 புள்ளி ஒன்று மூன்று பில்லியன் டாலராக இருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் நாட்டின் சரக்கு இறக்குமதி 720 புள்ளி இரண்டு நான்கு பில்லியன் டாலராக இருந்ததாகவும், சரக்கு வர்த்தக பற்றாக்குறை 283 பில்லியன் டாலராக இருந்தாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக திரு. **Bhushan Ramkrishna Gavai** –யை நியமிக்க தற்போதைய தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா பரிந்துரை செய்துள்ளார்.

திரு. சஞ்சீவ் கன்னாவின் பதவிக்காலம் அடுத்த மாதம் 13ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இதனையடுத்து புதிய தலைமை நீதிபதியாக 14ஆம் தேதி திரு. **B.R. Gavai** பதவியேற்பார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி மஹாராஷ்ட்ரா மாநிலம், புனே-யில் இன்று தொடங்கியது.

இந்திய விமானப்படை மற்றும் ராணுவத்தின் **JAT** படைப்பிரிவைச் சேர்ந்த 60 வீரர்கள் மற்றும் உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையிலும், இருதரப்பு உறவை விரிவுபடுத்தும் வகையிலும் இந்த வருடாந்திர பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 28ஆம் தேதிவரை இப்பயிற்சி நடைபெறுகிறது.

>>>>><<<<<

நாட்டில், சில்லரை பணவீக்கம் கடந்த நிதியாண்டில் 4 புள்ளி ஆறு சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நுகர்வோர் விலை குறியீட்டின் படி, கடந்த மார்ச் மாதம் முடிவில், பணவீக்கம் மூன்று புள்ளி மூன்று சதவீதம் குறைந்திருப்பதாக தெரிவித்துள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத வகையில், தற்போது குறைவான பணவீக்கத்தை எட்டியிருப்பதாகவும், இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகவும் நிதியமைச்சகம் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

**>>>>><<<<**

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக திரு. **Arun Palli** இன்று பதவியேற்றுக் கொண்டார்.

ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**>>>>><<<<**

காஸாவுக்கு அனுப்பப்படும் மனிதநேய உதவிகளை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Israel Katz** இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹமாஸ் அமைப்பின் செயல்பாட்டை முடக்கும் வகையிலும், பிணைக் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவதை ஹமாஸ் அமைப்பினர் தொடர்ந்து நிராகரிக்கும் பட்சத்தில், இஸ்ரேலின் போர் நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும் என்று திரு. **Israel Katz** எச்சரித்துள்ளார்.

**>>>>><<<<**

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Saurabh Chaudhary – Suruchi Inder Singh** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்புக் குழு பிரிவின் தகுதிச் சுற்று ஆட்டங்களில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் இந்த இணை இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

**>>>>><<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்றைய ஆட்டத்தில் தில்லி – ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

தில்லியில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள ஆட்டத்தில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**>>>>><<<<**

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nitin Gupta** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

சவுதிஅரேபியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 18 வயதுக்குட்பட்டோருக்கான 5 ஆயிரம் மீட்டர் நடைப் போட்டியில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>> <<<<**